## September 9, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாட்டின் 17-ஆவது குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் செவ்வாய்க் கிழமை (செப். 9) நடைபெறவுள்ளது.
   i. இதில், பாஜக தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் சி.பி.ராதாகிருஷ்ணனும் (67), எதிர்க்கட்சிகளின் 'இண்டி' கூட்டணி சார்பில் பி.சுதர்சன் ரெட்டியும் (79) போட்டியிடுகின்றனர்.
   ii. ரகசிய வாக்குச்சீட்டு முறையில் நடத்தப்படும் இந்தத் தேர்தலில் வேட்பாளரின் பெயருக்கு எதிரே தனது விருப்பத் தேர்வை எம்.பி.க்கள் குறிக்க வேண்டும். ரகசிய வாக்கெடுப்பு முறையின் கீழ் நடைபெறும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி கொறடாக்களுக்கு கட்டுப்பட மாட்டார்கள். எனவே, விரும்பிய வேட்பாளருக்கு அவர்கள் வாக்களிக்க முடியும்.
   iii. 543 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையில் ஒரு எம்.பி. இடம் காலியாக உள்ளது. அதுபோல, 233 உறுப்பினர் களைக் கொண்ட மாநிலங்களவையில் 5 எம்.பி.க்கள் இடம் காலியாக உள்ளது. இதுதவிர மாநிலங்களவையில் நியமன எம்.பி.க்கள் 12 பேர் உள்ளனர்.
   iv. அதன்படி, இரு அவைகளின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையான 788-இல், தற்போது 782 உறுப்பினர்கள் உள்ளனர். வெற்றி பெறுவதற்கு குறைந்தபட்சம் 392 வாக்குகள் தேவை. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 422 எம்.பி.க்கள் பலம் உள்ளதால், அக்கூட்டணி வேட்பாளரே வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொருபுறம், தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வாய்ப்பாக இத்தேர்தலை எதிர்க்கட்சிகள் கருதுகின்றன.
2. நேபாளத்தில் 'யூடியூப்', 'இன்ஸ்டாகிராம்', 'ஃபேஸ் புக் உள்பட 26 சமூக வலைதள செயலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டதற்கு எதிராக இளைஞர்கள் நடத்திய போராட்டத்தைக் கலைக்க போலீஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 19 பேர் உயிரிழந்தனர்; 300-க்கும் மேற்பட்டோர் காய மடைந்தனர்.
   i. இதையடுத்து, நாடு முழுவதும் நிலவிவரும் பதற்றமான சூழலைக் கட்டுக்குள் கொண்டுவர ராணுவத்துக்கு பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான அரசு உத்தரவிட்டது.
   ii. யூடியூப், இன்ஸ்டாகிராம், ஃபேஸ் புக், வாட்ஸ்ஆப், எக்ஸ் உள்பட 26 சமூக வலைதள செயலிகளுக்கு கடந்த வியாழக்கிழமை (செப். 4) நேபாள அரசு தடை விதித்தது.
   iii. மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தக வல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு மேற்கூறிய செயலிகள் பதிவு செய்யப்படாததால், அவற்றைத் தடை செய்வதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், சமூக வலைதளங் களை ஒழுங்குபடுத்தவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.
   iv. ஆனால், கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கி சமூக வலைதளங்களைத் தணிக்கைக்கு உட்படுத்தவே இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளதாக பொதுமக்களும் அரசியல் தலைவர்களும் கருதுகின்றனர்.
   v. நேபாளத்தில் இளைஞர்கள் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து, சமூக வலைதள செயலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதாக அரசு அறிவித்தது.

3. தென் அமெரிக்க நாடான கயானாவின் அதிபராக தற்போதைய அதிபர் இர்ஃபான் அலி இரண்டாவது முறையாக பதவியேற்றுக்கொண்டார்.
4. இந்தியா, இஸ்ரேல் நாடுகளிடையே முதலீடுகளைப் துகாப்பது மற்றும் ஊக்குவிக்கும் வகையில் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் கையொப்பமானது.
   i. நடைமுறை மாற்றங்களால் எழும் அபகரிப்பு நடவடிக்கைகளிலிருந்து முதலீடுகளுக்கு பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவது, தடையற்ற பரிமாற்றங்களுக்கு வழிகுத்தல், இழப்புகளுக்கு இழப்பீடு வழங்குதல் உள்ளிட்ட நடைமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.
   ii. அதே நேரம், அரசின் ஒழுங்கு நடவடிக்கைக்கான உரிமைக்கும் முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
   iii. இந்த ஒப்பந்தத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும், இஸ்ரேல் நிதித்துறை இணையமைச்சர் பெஸலெல் ஸ்மோட்ரிக்கும் கையொப்பமிட்டனர்.

5. **அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பானிஷ் வீரர் கார்லோஸ் அல்கராஸ் சாம்பியனானார். நடப்பு சாம்பியனும் உலகின் நம்பர் 1 வீரருமான இத்தாலிய யானிக் சின்னரை அல்கராஸ் தோற்கடித்து அமெரிக்க ஓபன் கோப்பையை வென்றார், மேலும் உலகின் நம்பர் 1 இடத்தை சின்னரிடமிருந்து பறித்தார்.**
6. தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக 8 புதிய திட்டங்களுக்கு சென்னை ஏற்றுமதி செயலாக்க சிறப்புப் பொருளாதார மண்டலம் (மெப்ஸ்) ஒப்புதல் அளித்துள்ளது.
   i. சென்னை ஏற்றுமதி செயலாக்க சிறப்புப் பொருளாதார மண்டலம் தமிழகம், புதுச்சேரி, அந்தமான் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கான ஏற்றுமதியை ஊக்குவிக்கிறது.
   ii. அதன்படி, தமிழகத்தில் ரூ.800 கோடி முதலீட்டில் தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி, பொறியியல் உள்ளிட்ட துறைகளில் மேற்கொள்ளப்படும் 8 புதிய திட்டங்களுக்கு மெப்ஸ் சிறப்பு பொருளாதார மண்டலம் ஒப்புதல் அளித்துள்ளது.
   iii. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட், கோவை எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலம், கோவை மாவட்டம் பொள்ளாச்சி உள்ளிட்ட இடங்களில் இந்த புதிய தொழில் திட்டங்கள் தொடங்கப்படுகின்றன.
   iv. இதன்மூலம் 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
7. இந்தியா மீது அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத வரியால் பாதிக்கப்படும் ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஒருங்கிணைந்த நிவாரணம் அளிக்க திட்டம் உருவாக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
   i. அமெரிக்க வரி விதிப்பால் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அந்தந்தத் துறைகளுக்கும் அல்லது அமைச்சகங்களுக்கும் தகவல் அளித்து வருகின்றன. அந்தத் தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.
   ii. பாதிப்பின் முழு அளவை இப்போது கணித்துக் கூற இயலாது. பாதிப்பு எந்த

அளவுக்கு இருக்கும் என்பதை ஒவ்வொரு துறை அமைச்சகமும் சம்பந்தப்பட்ட துறையினரிடம் கருத்துக் கேட்ட பின்புதான் தெரியவரும். அதன் பிறகு அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ஒருங்கி ணைந்த திட்டம் உருவாக்கப்படும்.

8. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் வர்த்தக சவால்களை எதிர்கொள்ள, பிரிக்ஸ் நாடுகள் பரஸ்பர வெற்றியை இலக்காகக் கொண்டு ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்' என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் அழைப்பு விடுத்தார்.

    i. மேலும், அமெரிக்காவின் வரிப் போர்கள் உலகப் பொருளாதாரத்தையும், சர்வதேச வர்த்தக விதிகளையும் கடுமையாக சீர்குலைத்து வருவதாகவும் அவர் விமர்சித்தார்.
    ii. பிரேஸில் அதிபர் லூலா டசில்வா ஏற்பாட்டில் நடந்த 'பிரிக்ஸ்' நாட்டுத் தலைவர்களின் கூட்டத்தில் சீன அதிபர் ஷி ஜின் பிங் ஆற்றிய உரை: காணொலி
    iii. உலகம் அதிவேகமாக மாறி வருகிறது. ஒரு சில நாடுகளால் நடத்தப்படும் வர்த்தக மற்றும் வரிப் போர்கள் உலகப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து, சர்வதேச வர்த்தக விதிகளைப் பலவீ னப்படுத்துகின்றன.
    iv. இந்த முக்கியமான காலகட்டத்தில் தெற்குலக நாடுகளின் முன்னணி அமைப்பான பிரிக்ஸ், வெளிப்படைத்தன்மை, அனை வரையும் உள்ளடக்கிய அணுகு -முறை, பரஸ்பர வெற்றிக்கான ஒத்துழைப்பு, பலதரப்புவாதம் ஆகியவற்றை இணைந்து பாதுகாக்க வேண்டும்.

9. பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் பிரான்சுவா பேரூ தோல்வி யடைந்த நிலையில், அவரது தலைமையிலான அரசு கவிழ்ந்தது.
    i. பிரான்சுவா பேரூ பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் மொத்தம் 577 உறுப்பினர்கள் உள்ள நிலையில், நம்பிக்கை வாக்கெடுப்பில் பேரூக்கு எதிராக 364 உறுப்பினர்களும், ஆதரவாக 194 உறுப்பினர்களும் வாக்களித்தனர். 19 உறுப்பினர்கள் வாக்கெடுப்பை புறக்கணித்தனர்.
    ii. இதன்மூலம் கடந்த 12 மாதங்களில் 4-ஆவது பிரதமரை தேர்ந்தெடுக்கும் சூழலுக்கு அதிபர் இமானு வல் மேக்ரான் தள்ளப்பட்டுள்ளார்.
    iii. ஐரோப்பாவின் 2-ஆவது பெரிய பொருளாதார நாடாக விளங்கும் பிரான்ஸில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அரசியல் நிலை யற்றத்தன்மை நிலவுகிறது. இத்துடன் பட்ஜெட் ரீதியான சிக்கல்கள், உக்ரைன் மற்றும் காஸா போர், அமெரிக்க வரி விதிப்பு எனப் பல்வேறு சவால்களை பிரான்ஸ் எதிர்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.